**கூடுதல் சார்பு நீதிமன்றம், திருப்பூர்.**

**OS.No. 211/2023**

திரு.ஜெகநாதன் (D.W –2) **28.01.2026**

**<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

1. என்ன படித்துள்ளேன் என்றால் பட்டப்படிப்பு படிப்புள்ளேன். முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள முகவரி எவ்வளவு வருடங்களாக வசித்து வருகிறேன் என்றால் 25 வருடங்களாக வசித்து வருகிறேன். அந்த விவரம் தான் சாட்சி சான்றானும் Y1 ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் ஆமாம். என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் கம்பெனி 15 வருடமாக வைத்துள்ளேன். நீதிமன்றத்தில் இருந்து சாட்சியம் அளிப்பதற்கு சமம் வந்ததா என்றால் இல்லை. பிரதிவாதி தான் சாட்சி அளிக்க அழைத்து வந்தார் என்றால் சரி.

2. தாவா சொத்தில் சர்வே எண் என்ன என்றால் சர்வே எண்.378 ற்கு வழக்கு நடந்து வருகிறது. என்னுடைய தகப்பனாருக்கு தாவா கிராமத்தில் சொத்துக்கள் உள்ளது என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்து உள்ளீர்களா என்றால் இல்லை. முதல் விசாரணை வாக்குமூலம் பத்தி 4 ல் தாவா சொத்துக்களில் டிராக்டர் கொண்டு சென்றதாக சொல்லி உள்ளேன் என்றால் சரி. எதற்காக டிராக்டர் அவ்வாறு சென்றது என்றால் பாதை அமைப்பதற்காக சென்றது. ஏற்கனவே தாவா சொத்தில் கிழ மேல் பாதை உள்ளது என்றால் தவறு. அதை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

3. எங்களுடைய சொத்து க.ச.எண்.378 க்கு அருகில் உள்ளதா என்றால் எங்களுடைய சொத்து க.ச.எண்.394 ல் அமைந்துள்ளது. இரண்டு

சொத்துக்களுக்கும் இடையே எவ்வளவு தூரம் என்றால் 200 மீட்டர். தவறாக சாட்சியை அளிக்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய தகப்பனார் தற்சமயம் உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை, இறந்து போய்விட்டார். தாவா சொத்து முதலில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியும் வாதியுடைய பங்காளிக்கு பாத்தியப்பட்டது. பிரதிவாதி அவருடைய சொத்தை கிரையமாகப் பெற்றுள்ளார் என்றால் ஆமாம். அந்தக் கிரைய ஆவணத்தை படித்துப்பார்த்து உள்ளீர்களா என்றால் பார்த்துள்ளேன். அவருடைய கிரைய ஆவணத்திலே தாவா பாதை விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது என்றால் அவ்வாறு சொல்லப்படவில்லை.

4. பிரதிவாதியின் பெயரில் உள்ள கிரைய ஆவணத்தில் தாவா பாதை விபரங்கள் சொல்லப்பட்டுள்ளது. அதை படித்துப் பார்க்காமல் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்தார் அவர்களுடைய சொத்தில் குவாரி தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரி. க.ச.எண்.378/1சி குவாரி தொழில் செய்து வந்தார்கள் என்றால் தவறு. அது வேறு சொத்து அதனுடைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. பி.வா.சா.ஆ–1 சொத்து விவரத்தில் க.ச.எண். 378/1பி மாமூல் தட பாத்தியம் என்று சொல்லப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். பி.வா.சா.ஆ–4 ல் ஆவணத்திலும் மாமூல் தட பாத்தியம் என்று சொத்து விவரத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரி.

5. பிரதிவாதி உடைய தங்கையின் மகன் நான் என்றால் சரி. இந்த விவரங்கள் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ளதா என்றால் சொல்லவில்லை. பிரதிவாதிக்கு நான் நெருங்கிய உறவினர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதன் பேரில் பொய்யான சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு. தாவா சொத்தை நீதிமன்றத்தில் இருந்து

நீதிமன்ற ஆணையாளர் நியமனம் செய்யப்பட்டு நீதிமன்ற ஆணையாளர் சொத்துக்களை பார்வையிட்டார் என்றால் தெரியாது. நான் 25 வருடங்களாக தாவா முகவரியில் வசிக்கவில்லை. தொழில் சம்பந்தமாக 15 வருடமாக திருப்பூரில் வசித்து வருகிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி கேட்டுக் கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் தவறு.

சாட்சியின் கூற்று என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரியாக உள்ளதென ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S/d. கே.ஆர்.கண்ணன்
கூடுதல் சார்பு நீதிபதி,
திருப்பூர்.